தமிழ்ச்சிட்டு



நூல்: 1. இசை: 6.

காசு 15

தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்

உங்கள் மடல்கள்

O கற்பூரத்தைக் கொளுத்தினால் எப்படி மிகுந்த சுடர்விட்டு எரிகிறதோ அவ்வளவு உணர்வு வருகின்றது, தமிழ்ச் சிட்டைப் படிக்கும் பொழுது.

—வ. அண்ணாமலை, கரையாம்புத்தூர்.

O வான்பட்டு மனம் இழுக்கும், வண்ணவில் போலும், நெஞ்சந்
தான்பட்டுத் தேன்சுரக்கும் தமிழ்ப்பாட்டுப் போலும், எங்கள்
ஊன்பட்டு, உயிரில்பட்டு, உணர்வினில் தமிழ்ச்சிட்டே நீ
தேன்சிட்டாய்க் கலந்தாய் ஆர்க்கும் திரைகடல் தாண்டி, இங்கே!

—உலகுதாசன், சிங்கப்பூர்.

O தென்மொழியும் தமிழ்ச்சிட்டும் தமிழ்த்தாய்க்கு அணிந்த அழகான இரண்டு மணிமாலைகள் என்றால் மிகையாகாது.

—கு. சகந்நாதன், தில்லைநகர், சேலம்-1.

O மாணவர்களின் மாண்பு காக்கும் ஓர் இதழாக மட்டுமல்லாமல் அன்னை மொழிக்கு ஓர் அரணாகவும் விளங்கி, எங்கள் உள்ளங்களின் ஒளியாக அமர்ந்திருக்கின்றது. அல்லும் பகலும் அயராதுழைக்கும் நீங்கள் நலமுற எங்கள் பள்ளி மாணவர்கள் சார்பில் இறைவனை இறைஞ்சுகின்றேன்.

—இரா. தாமோதரன், அ. உ. பள்ளி, சங்கராபுரம்.

O கண்டதைத் தின்றால் உண்டது செரிக்காது என்பதுபோல் கண்டதைப் படிக்கப் பண்டிதன் ஆகான் என்பதை உணர்ந்து கவர்ச்சிக் கழிசடை இதழ்களான (... ... ...) முதலியவற்றையும், கலப்புத் தமிழ் இதழ்களையும் கையால்கூடத் தொடுவதில்லையென்று உறுதி எடுத்துக்கொண்டோம். தென்மொழியும் தமிழ்ச்சிட்டும் எங்கள் கண்கள். தனித்தமிழ்ப் பாலூட்டித் தலைசிறந்தவர்களாக்கும் வழிகாட்டி! அதன்வழிச் செல்வது எங்கள் கடமை. அதுவே எங்கள் கொள்கை.

தமிழ்ச்சிட்டில் வினாவிடைப் பகுதி தொடங்க வேண்டுகின்றோம். புதிருக்கு விளக்கமும் வெளியிடவும். பாவாணர், பாரதிதாசனார் போன்ற அறிஞர்களின் வரலாறுகளையும் சுருக்கமாக வெளியிடுவீர்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

பின் குறிப்பு:- ஆர்வ மிகுதியால் இம்மடலைத் தலைகீழாக எழுதியதற்கு மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

—சி. பூ. மணி, சுதந்திரநகர், சீராமபுரம்.

தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ் சிறுவர் கலைஇதழ்

இன்றைய பயனே நேற்றைய உழைப்பு !
இன்றைய சிறுவர் நாளைய உலகம் !
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை !
என்றும் அழியாது இருப்பது புகழே!

குரல்–1 | தி. பி. ௧௯௯௮ தை (சனவரி) | இசை–6

அரசியலை அறிந்து கொள்ளுங்கள் ! ஈடுபடாதீர்கள் !!

சிறுவர்களாகிய நீங்கள் உங்கள் இளமைப் பருவத்தில் எத்தனையோ செய்திகளைப் பற்றிக் கேள்விப் படுகின்றீர்கள் எத்தனையோ காட்சிகளைக் காணுகின்றீர்கள். அவற்றில் உங்கள் மனங்களைத் தொடுவன சில; அறிவைத் தூண்டுவன சில; பண்பாட்டை வளர்ப்பன சில. இவற்றிற்கு எதிர் மாறாக உங்கள் உள்ளங்களைச் சில செய்திகள் கெடுக்கலாம். சில செய்திகள் அறிவைக் கெடுக்கலாம். சில உங்களுக்குத் தீய பழக்க வழக்கங்களை வருவிக்கலாம். எனவே உங்கள் செவிகளில் படுவனவற்றையெல்லாம் நீங்கள் கேட்டுத்தான் ஆக வேண்டுமென்பதில்லை. கண்களிற் படுவன எல்லாவற்றையும் நீங்கள் பார்த்துத்தான் ஆகவேண்டும் என்பதும் இல்லை. உங்களுக்குத் தேவையானவற்றையே நீங்கள் தேடிப் பெறவேண்டும். தேவையில்லாதவை தேடாமலே கிடைத்தாலும் ஒதுக்கித் தள்ளிவிட வேண்டும்.

பொறுப்பாசிரியர்:– பெருஞ்சித்திரன்.
உறுப்பாசிரியர்:– இறைக்குருவன்
தென்மொழி மின் அச்சகம், கடலூர்–1.

நீங்கள் சிறுவர்களாக இருக்கும்பொழுது உங்களுக்கு உலகியல் அறிவு சரியாக வளர்ந்திருக்காது இல்லையா? 13 அகவை (வயது) முதல் 19 அகவை முடிய உள்ள யாவரும் சிறுவர்களே. 20 அகவை முதல் 25 அகவை வரை உள்ள யாவரும் இளைஞர்கள். 13 முதல் 19 வரையுள்ள பருவத்தை ஆங்கிலத்தில் Teen-age என்பார்கள். தமிழில் இதைப் பதின்பருவம் என்று கூறலாம். இந்தப் பருவத்தில் ஒரு சிறுவனின் உள்ளம் எந்த உணர்வில் தோய்கின்றதோ, அந்த உணர்வே அவன் உள்ளத்தில் பேரளவு நின்று, வாழ்க்கை முற்றும் அவனை ஆட்டிவைக்கும் என்று உளவியல் அறிஞர்கள் கூறுகின்றனர்.

எடுத்துக் காட்டாக அந்தப் பருவத்தில் உள்ள சிறுவன் ஒருவனின் உள்ளம் ஓவிய நாட்டத்தில் திருப்பப்பெற்ருல் அவன் பிற்காலத்தில் பெரிய ஓவியன் ஆகலாம். இசையின்மேல் நாட்டம் கொள்ளச் செய்தால் அவன் பெரிய இசைப்புலவன் ஆகலாம். அறிவியலில் அவன் உள்ளத்தை ஈடுபடும்படி செய்தால், அவன் பிற்காலத்தில் பெரிய அறிவியலறிஞன் ஆவது திண்ணம். இவ்வாறு நல்ல துறைகளில் திருப்பப் படுவதற்கு மாருகத் திருட்டுப் பழக்கத்தில் இப்பருவத்தில் ஒரு சிறுவன் ஈடுபாடு கொள்வானுனல், அவன் பெரிய திருடனுக வளர்வான். இதுவன்றி வேறு தீய பழக்கங்களில் ஈடுபாட்டாலும் அவன் இறுதியில் அவ்வழிகளிலேயே சிறந்துவிளங்குவான். குழந்தைகளே! இந்தப் பருவத்தில் எதை விரும்புகின்றீர்களோ, அதையே நீங்கள் இறுதியில் சென்றடைகின்றீர்கள். எனவே இந்தப் பதின் பருவத்தில் நீங்கள் எவ்வளவு விழிப்பாக இருக்க வேண்டும் என்பது புரிகின்றது இல்லையா?

ஆகவே, நீங்கள் இந்தப் பருவத்தில் அறிவை வளர்த்துக் கொள்வதில் காலத்தைச் செலவிடுவதுதான் நல்லது. சிறுவர்களாகிய உங்களின் உள்ளம் இப் பருவத்தில் எதையாவது பற்றிக்கொள்ளத் துடிதுடித்து நிற்கும். கண்களில் படுவதையும் காதுகளில் கேட்பதையும் அடைவதற்காகக் கால்கள் தாமாக நடக்கும். கைகள் அவற்றைப்

பற்றிக் கொள்ளத் துருதுருத்து நிற்கும். இப்படிப் பொறிகள் செல்லுகின்ற இடங்களுக்கெல்லாம், நாம் உள்ளத்தைச் செல்லவிடாமல் தடுத்து, நல்லவற்றின்பால் செலுத்துவதைத்தான் அறிவு என்று வள்ளுவர் சொல்கின்றார். அறிவில்லாதவன் தன் உள்ளத்தைக் கண்டபடி அலைய விடுவான்.

இக்காலத்தில் சிறுவர்களாகிய உங்கள் கண்களைக் கவர்வன திரைப்படங்களே! காதுகளைக் கவர்வன அரசியல் கட்சிகளின் கட்டுப்பாடற்ற ஆர்வாரப் பேச்சுகளே! அவற்றிலும் அவை போன்ற பிறவற்றிலும் உள்ள நன்மைகளைவிடத் தீமைகளே மிகுதி. அம் மிகுதியாக உள்ள தீமையானவற்றை விலக்கிவிட்டு, நன்மையான ஒருசிலவற்றைத் தேர்ந்தெடுத்துக்கொள்ள நீங்கள் இப்பொழுது அறிந்திருக்கமாட்டீர்கள். சிலபொழுது உங்களுக்கு நன்மையானவற்றை விட்டு விட்டுத் தீமையானவற்றையே பொறுக்கிக் கொள்வீர்கள். ஏனென்றால் நன்மையைவிடத் தீமையே அழகாகவும் கவர்ச்சியாகவும் இருக்கும்.

இப்பொழுதுள்ள நம் நாட்டுச் சூழ்நிலையில் உங்களை மிகவும் கவரக்கூடியது அரசியலே! அரசியல் எல்லாருக்கும் வேண்டியதே. ஆனால் அதைப் புரிந்து கொள்ளும் அளவிற்கு நாம் வந்தவுடன்தான் அதன் நன்மை தீமை நமக்கு விளங்கும். அது விளங்கிய பின்தான் நாம் அதில் ஈடுபட வேண்டும் அதுவரை நாம் அதுபற்றித் தெரிந்து கொள்வதில் பிழையில்லை. ஆனால் எந்தவகையான அரசியலிலும் நீங்கள் உங்களை ஈடுபடுத்திக் கொள்ளக் கூடாது. முதலில் உங்கள் அறிவை வளர்த்துக் கொள்ளுங்கள்; மனத்தைப் பண்படுத்திக் கொள்ளுங்கள். அதுவரை நீங்கள் உங்கள் கண்களையும் காதுகளையும் நம்பி அறிவையும், மனத்தையும் எதிலும் ஈடுபடுத்திவிட வேண்டா. 'கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக, என்பது வள்ளுவர் கருத்து.

—:o:—



உலகம் சுற்றுவோம்

திருவனந்தபுரத்தில் மருத்துவ ஊழியர்கள் வேலை நிறுத்தம்

திருவனந்தபுரம் மருத்துவ மனைகளில் உள்ள செவிலிகளும், மருந்து கலப்பவர்களும், துப்புரவலர்களும் பிற கடைநிலை ஊழியர்களும் ஊதிய உயர்வு கேட்டு, ஒரு கிழமையாக வேலை நிறுத்தம் மேற்கொண்டுள்ளனர். இதனால் அங்குள்ள நோயாளிகள் மிகவும் துன்புறுகின்றனர். குழந்தைப் பேற்றுக்கு வந்தவர்களும் கவனிக்கப்படாமையால் தொல்லைப்பட வேண்டியிருக்கின்றது. ஒரு பிள்ளைத் தாய்ச்சிக்குப் பாதையிலேயே ஒரு குழந்தை பிறந்தது. இதுபற்றி அரசினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

சீனாவுக்கும் உருசியாவுக்கும் போர் மூளுமாம் !

சீனாவும் உருசியாவும் பொதுவுடைமை நாடுகள். எப்பொழுதும் ஒரு பொதுவுடைமை நாடு இன்னொரு பொதுவுடைமை நாட்டின்மேல் போர் தொடுப்பதில்லை. ஆனால் சீனாவின் பொதுவுடைமைக் கொள்கைக்கும் உருசியாவின் பொதுவுடைமைக் கொள்கைக்கும் சிறு அளவில் வேறுபாடு இருந்தது. இப்பொழுது அந்த வேறுபாடு வளர்ந்து வருகின்றது. இது பகையாக மாறி இரண்டு நாடுகளுக்கும் போர் மூளலாம் என்று உருசியத் தலைவர்கள் கவலையாக இருக்கின்றார்களாம். உண்மையாகவே இந்தப் போர் தொடங்கினால் அது பெரும் போராக இருக்கும். இதனால் உலகில் அமைதி குறையும்.

விண்வெளியில் மறைந்த செயற்கைக் கோள்

திசம்பர் மாதம் 14-ஆம் நாள் அறிவியல் ஆராய்ச்சிக்கென அரைக் கல்லெடை (TON) கனமும் 7 அடி உயரமும் கொண்ட செயற்கைக்கோள் ஒன்றை அமெரிக்கா விண்வெளியில் செலுத்தியது. அதில் 10,000 பழப் பூச்சிகள், 1000 மாவு வண்டுகள், 560 தேனீக்கள், 120 தவளை முட்டைகள், 875 'அமீபா' பூச்சிகள், 1300 நோய்நுண்ணுயிரிகள், 78 கோதுமை நாற்றுகள், 9 மிளகுச் செடிகள், இலக்கக் கணக்கான சிதல் விதைகள் இருந்தனவாம். அவற்றின் உயிரியல் வளர்ச்சியில் ஏற்படும் மாற்றங்களை அறியவே அவ்வுயிர்கள் அனுப்பப்பட்டன. ஆனால் அக்கோள் 46 முறை இப் புவியைச் சுற்றிவிட்டு 47-ஆவது சுற்றில் திசை தப்பி விண்வெளியில் எங்கோ சென்று மறைந்துவிட்டது. அஃது ஒருவேளை பசிபிக் கடலில் விழுந்திருக்கலாம் என்று கருதி அங்கும் தேடிப்பார்த்தனர்.. ஆனால் பயனில்லையாம்.



6-குறுந்தொகை

எட்டுத்தொகை நூல்களுள் குறுந்தொகையும் ஒன்று ஆகும். நற்றிணையைப் போன்றே இதிலும் நானூறு பாடல்கள் உள்ளன. எனவே இதனைக் குறுந்தொகை நானூறு எனவும் வழங்குவர்.

குறுந்தொகையில் உள்ள பாடல்கள் நான்கு அடிகளுக்குக் குறையாமலும் எட்டு அடிகளுக்கு மிகாமலும் இருப்பனவாகும். இவ்வாறு குறுகிய அளவினவாய் இருப்பதாலேயே இது குறுந்தொகை என்று பெயர் பெற்றது.

இப்பொழுது குறுந்தொகையில் 401 பாட்டுகள் உள்ளன. இவற்றில் 307 ஆம் பாட்டு மட்டும் ஒன்பது அடிகள் உடையதாக காணப்படுகிறது. ஆதலால் அந்தப் பாடல் குறுந்தொகையில் மிகையாக உள்ள பாடலாக இருக்கலாம் என்றும் நற்றிணையில் காணமற்போன பாட்லாக இருக்கலாம் என்றும் அறிஞர் கருதுகின்றனர்.

இந்நூலிளுள்ள பாடல்கள் பலவும் உரையாசிரியர்கள் பலரால் பற்பல நூல்களில் எடுத்துக்காட்டாகக் கையாளப்பட்டுள்ளன. 165 பாடல்கள் மட்டுமே அப்படி எடுத்துக் காட்டாகக் கொள்ளப்படாதனவாகும்.

இக் குறுந்தொகையைத் தொகுத்தவர் பூரிக்கோ என்பவராவர் தொகுக்கச் சொன்னவர் யார் என்று புலப்படவில்லை.

இந்நூலில் உள்ள பாடல்கள் எல்லாம் அகத்துறை எனப்படும் காதல் பாடல்களேயாகும். இப் பாடல்கள் மக்களின் பல்வேறு வகையான வாழ்க்கை முறைகளையும், பிறவற்றையும் மிக நுட்பமாகவும் இனிமை ததும்பவும் விளக்குவனவாகும்.

ஒரு நாள் இரவு; நள்ளிரவு. சிறுவன் படுத்திருந்த அறையி லிருந்து பெரும் குரல் கேட்கிறது. ஒரே கூச்சல். தாய் எழுந்திருந் தாள். அவளுக்கு ஒன்றும் விளங்கவில்லை. மகன் படுத்திருந்த அறையை நோக்கி ஓடோடிச் சென்றாள். கதவைத் தட்டி உள்ளே நுழைந்தாள். உள்ளே நின்ற மகனை நோக்கி, "மகனே, ஏன் கத்து கின்றாய்? எதையாவது பார்த்து அஞ்சி விட்டாயா? அல்லது கொடிய கனவு ஏதாவது கண்டாயா?" என்று மகனை நெஞ்சோடு அணைத்துக் கொண்டு கேட்டாள். "இல்லை, அம்மா! நான் வருங் காலத்தில் நம் நாட்டின் மாபெரும் தலைவனாவேன் இல்லையா? அப் பொழுது நான் எவ்வளவோ திறமையாகச் சொற்பொழிவாற்ற வேண் டும். அதற்காகத்தான் இப்பொழுதே பேசிப் பழகுகின்றேன்" என்றான் அப்பன்னிரண்டு ஆண்டுச் சிறுவன். அப்படிச் சிறுவனாக இருக்கும் பொழுதே தன்னம்பிக்கை வேரூன்றி, உயர்ந்த கொள்கை கொண்டி ருந்த அச்சிறுவன்தான் இத்தாலியின் பெருந்தலைவன் முசோலினி!

—உதயை. மு. வீரையன்.

(அடிப்படை: 'வாழ்க்கையில் வெற்றி' என்ற நூல்)

(முன்பக்கத் தொடர்ச்சி)

இதில் உள்ள பாடல்களைப் பாடிய புலவர்கள் 205 பேர் ஆவர். இவருள் 10 பேர்களின் பெயர் என்னவென்று தெரியவில்லை.

இதில் உள்ள பாடல்களில் பல செய்திகள் கூறப்பட்டுள்ளன. பண்டமாற்று முறை இருந்தது என்பது ஒரு பாட்டால் தெரியவருகின் றது. புலிப்பல்லால் தாலி செய்து குழந்தைகளுக்கு அணிந்ததையும், ஆடவர்கள் தம் கால்களில் வெற்றிக்கழல் இட்டுக் கொள்வதையும், நன்னன் என்ற ஓர் அரசன் ஆராயாமல் ஓர் இளம் பெண்ணைக் கொலை செய்து அறநெறி பிறழ்ந்ததையும் பற்றிச் சில பாடல்கள் குறிப்பிடு கின்றன.

இக் குறுந்தொகையும் இதுபோன்ற ஏனைய கழக நூல்களும் செந்தமிழின் ஆழ்ந்தகன்ற வளத்தையும் இனிமையையும் அறிந்து மகிழத் தலைசிறந்தனவாகும்.

6. ஒரு, ஓர், இரு, ஈர்.

ஒரு ஊரில் ஒரு அரசன் இருந்தான்.

இரு ஆணிகளை எடுத்து இரு இடங்களில் அடித்தான்.

இந்தச் சொல் தொடர்களைக் கவனியுங்கள். இவை இரண்டும் பிழையான தொடர்கள்.

இவற்றில் உள்ள பிழைகள் எவை என்று பார்ப்போம். உயிரெழுத்துகள் எவை என்று உங்களுக்குத் தெரியும்.

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ.

இவை பன்னிரண்டும் உயிர் எழுத்துகள்.

இவற்றை ஓசை அளவாகப் பிரித்தால்

அ, இ, உ, எ, ஐ, ஒ என்று அறுவகையாகப் பிரிக்கலாம். பிற உயிர் எழுத்துகள் இவற்றின் வேறுபட்ட ஓசைகளே!

ஆங்கிலத்திலும் இவ்வோசையுடைய எழுத்துகள் உள. அவையும் உயிர் எழுத்துகள்தாம்.

அவை **A E I O U** ஆகிய ஐந்து எழுத்துகளே. ஆங்கிலத்தில் இவை **Vowels** எனப்படும்.

இவ்வெழுத்துகளை நம் உயிரெழுத்துகளுடன் கீழ்க்காணும் வகையில் ஒப்பிடலாம்.

அ, ஆ, எ, ஏ	– **A.**		
இ, ஈ	– **E.**	ஐ	– **I.**
உ, ஊ	– **U.**	ஒ, ஓ, ஔ	– **O.**

ஆங்கிலத்தில் 'ஒரு' என்ற சொல்லைக் குறிப்பதற்கு a, an என்ற இரண்டு சொற்களையும் பயன்படுத்துகின்றனர் இல்லையா?

அஃதாவது A man, An apple என்றும் குறிப்பிடுகின்றனர். மேற்கண்ட ஐந்து ஆங்கில உயிர் எழுத்துகளில் ஏதாவது ஒன்று ஒரு சொல்லின் முதல் எழுத்தாக வருமானால், அந்தச் சொல்லுக்கு முன்னால் A போடக் கூடாது, An தான் போட வேண்டும் என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். ஆனால் தமிழிலும் அப்படித்தான்—என்பதை உங்களில் பெரும்பாலோர் அறிந்திருக்க மாட்டீர்கள். ஆசிரியர் சிலர்க்கும் கூட அது தெரியாமல் இருக்கும். காரணம் ஆங்கிலேயர் ஏற்படுத்திக் கொண்ட மொழி ஒழுங்கிற்குத் தக்கபடிதான் அவர்கள் நடக்கின்றனர். நாமோ நமக்கு விரும்பியபடியெல்லாம் பேசுகின்றோம், எழுதுகின்றோம். இப்படியே போனால் நாம் விரும்பியபடியெல்லாம் செய்யத் தொடங்கி விடுவோம் இல்லையா? இனி நீங்கள் எழுதும்பொழுது கவனிக்க வேண்டியது இது.

உயிரெழுத்தில் தொடங்கும் ஒரு சொல்லுக்கு முன் நீங்கள் 'ஓர்' என்றும், பிறவற்றிற்கு முன் 'ஒரு' என்றுந்தான் போடுதல் வேண்டும். அதுபோலவே 'ஈர்' என்பதையும் 'இரு' என்ற சொல்லையும் பயன்படுத்துதல் வேண்டும். இல்லையானால் 'இரண்டு' என்ற சொல்லையே பயன் படுத்துவது நல்லது.

எனவே மேலே கூறிய தொடர்களைப் பிழையின்றிக் கீழ்க் காணுதல் போல் எழுத வேண்டும்.

ஓர் ஊரில் ஓர் அரசன் இருந்தான்.

இரண்டு ஆணிகளை எடுத்து ஈரிடங்களில் அடித்தான். இது போலவே,

ஒரு ஆயிரம் என்பது பிழை. ஓராயிரம் என்பதே சரி.

இரு ஆயிரம் என்பது பிழை. ஈராயிரம் அல்லது இரண்டாயிரம் என்பதே சரி.

இந்த வகையில் இன்னும் சில விளக்கங்களை அடுத்த இதழில் தெரிந்து கொள்வோம்.

பாட்டி

துரை-மாணிக்கம்

கூன் விழுந்த பாட்டி,
குட்டைக் காலை நீட்டிப்
பாலுஞ் சோறும் ஊட்டிப்
படுக்க வைப்பாள் ஆட்டி!

ஈரும் பேனும் பார்ப்பாள்!
எங்கும் தூய்மை சேர்ப்பாள்!
நோயை நன்கு தீர்ப்பாள்!
நாளும் அன்பை வார்ப்பாள்!

அண்டை வீடு செல்வாள்!
அரட்டை பேசி வெல்வாள்!
கொசுவை ஈயைக் கொல்வாள்!
கோடிக் கதைகள் சொல்வாள்!

(இப்பாடல் முன்பே 'தென்மொழி' சிறுவர் பகுதியில் வெளியிடப் பெற்றது. 'தமிழ்ச்சிட்டு' தம்பி தங்கைகளுக்காக மீண்டும் வெளியிடப் பெறுகின்றது.)

ஆட்டுக் குட்டி

மா. இலெ. தங்கப்பா

நேற்று எங்கள் வீட்டிலே
ஆட்டுக் குட்டி பிறந்தது.
கீற்று மெத்தை மீதிலே
கிடந்து வாலை ஆட்டுது.

மோப்பம், மோப்பம் பிடிக்குது
முகத்தை மெல்லத் தூக்குது.
பாப்பா போலத் தாயிடம்
பாலைச் சப்பிக் குடிக்குது.

குட்டிப்பாப்பா போலவே
குட்டி ஆடும் கத்துது.
தொட்டுப் பார்க்க ஆவல்தான்;
பட்டுப் போல இருக்குது.

வெள்ளையான உடம்பு தான்
மேலே கருப்புப் புள்ளிதான்
கொள்ளை அழகு! தெரியுமா?
கூட வந்து பாருங்கள்!

—

பூனை

மு. வை. அரவிந்தன்.

எங்கள் வீட்டுப் பூனை
எலியை வேட்டை யாடும்!
பதுங்கிப் பதுங்கி ஓடும்!
பாலைக் குடித்து உருட்டும்!
உறியின் மீதே ஏற
உயர உயரத் தாவும்!

ஆளில் லாத போதோ
அடுப்பங் கரையுள் நுழையும்!
பாலும் சோறும் போட்டால்
பக்கம் வந்து தின்னும்!
'மிய்யாவ்' என்று கத்தி
மேலே விழுந்து புரளும்!
இரவில் சுற்றித் திரியும்!
எலிகள் எல்லாம் மறையும்!

—

சிட்டே வா!

காரை—இறையடியான்.

சிட்டுக் குருவி சிட்டுக் குருவி
சிரித்து மகிழ வா;
பொட்டுக் கடலை கொட்டித் தருவேன்;
பொறுக்கி எடுக்க வா!
சட்டி, கலங்கள் எட்டும் அளிப்பேன்
சமைத்துக் கொடுக்க வா!
பட்டுச் சேலை கட்டிப் பறப்போய்
பழக விரைந்து வா!

துள்ளிக் குதித்துத் துள்ளிக் குதித்துத்
துடிக்கும் உருவே வா!
கள்ளம் அறியாப் பிள்ளை எனக்குக்
கனிகள் கொடுக்க வா!
பள்ளிப் படிப்பில் புள்ளி மிகுதி
படைத்தேன் அருகே வா!
கொள்ளை மகிழ்ச்சி உள்ளத் துடையேன்
குதித்து விரைந்து வா!

அன்னை மகிழ்வாள் என்னை அடைந்தே
அருகில் இருக்க வா!
சின்ன உருவே மின்னல் விரைவே
சிறப்புப் பெறுவோம் வா!
புன்னை மரத்தில் உன்னை மறந்து
பொழுதைக் கழித்தாய் வா!
என்ன தடையாம் இன்னும் நமக்குள்?
எழுந்து விரைந்து வா!

எல்லாம் பெரியவை . . .

தொகுப்பு: சு. வேல்முருகன், மதகடிப்பட்டு.

நிலப்பிரப்பில் பெரியது ஆசியாக் கண்டம்.

கடல்களில் பெரிய கடல் பசிபிக் பெருங்கடல்.

மலைகளில் பெரியமலை இமயமலை.

நாட்டில் பெரிய நாடு உருசியா.

தீவுகளில் பெரிய தீவு ஆசுத்துரேலியா.

மக்கள் தொகையில் பெரிய நாடு சீனம்.

மொழியில் மிகப்பரந்த மொழி சீனமொழி.
(ஒவ்வோர் எழுத்தும் ஒவ்வொரு பெயரைக் குறிப்பன)

நீளத்தில் பெரிய ஆறு சிசௌரி மிசிசிபி ஆறு.
(அமெரிக்க இணைப்பு நாடுகளூடே பாய்கின்றது)

ஆழத்தில் பெரிய ஆறு அமேசான் ஆறு.
(பிரேசில் நாட்டில் பாய்கின்றது)

ஏரிகளில் பெரிய ஏரி காசுபியன் ஏரி (கடல்)
(உருசியாவில் இருக்கின்றது)

விலங்குகளில் உயரமானது ஒட்டைச் சிவிங்கி.

கண்களுக்கு மை தீட்டிக் கொள்ள வேண்டுமா ?

கண்களுக்கு மைதீட்டிக் கொள்வதில் பெண் பிள்ளைகளுக்கு எப் பொழுதுமே விருப்பம். பண்டைக் காலத்தில் ஆண்களும் கண்களுக்கு மை தீட்டிக் கொண்டனர். ஆனால் அவ்வாறு செய்தது அழகுக்காக அன்று. கண்களுக்கு நோய்கள் வராமல் தடுப்பதும், கண்களைக் குளிர்ச்சியாக வைத்துக் கொள்வதுமே அவர்கள் நோக்கம். வர வர இம்முறை அழகுக்காக என்று கருதப்பட்டது. அழகுக்காகவே மை தீட்டிக் கொள்வது என்ற எண்ணம் வளர்ந்தவுடன், ஆண்களும் பெண்களும் கறுப்பாக இருக்கும் எந்த மையையும் தீட்டித் தம் கண் களை அழகு படுத்தத் தொடங்கி விட்டனர். இக்காலத்தில் இப்பழக்கம் மிகுந்து விட்டது. ஆனால் ஆடவர்கள் மைதீட்டிக் கொள்வதைக் கைவிட்டு விட்டனர்.

மைத்தீட்டிக் கொள்வது அழகுக்காக அன்று. கண்களின் நலத் திற்காகவே ஆகும். பெரும்பாலும் கடைகளில் விற்கும் கண் மைகள் எல்லாம் போலி மைகளே. வெறும் அழகுக்காக மட்டும் செய்யப்பெற் றவையாகும் அவை. எனவே தம் கண்களுக்கு மை தீட்டிக்கொள்ள விரும்பும் பெண்கள் கீழ்க்காணும் வகையில் மையைச் செய்து கொள் வதே நல்லது.

நல்ல கரிசலாங் கண்ணிக் கீரையைப் பசுமையாகப் பறித்து, அதன் இலைகளைக் கழுவிப் பிழிந்து சாற்றை எடுத்துக் கொள்ளுதல் வேண்டும். பின் சந்தனப் பலகையில் அச்சாற்றை ஊற்றி, அதில் நல்ல கடுக்காயை உறைத்து உறைத்து அதன் சாந்தை எடுத்துக் கொள்ளுதல் வேண்டும். அதனை அகன்ற ஒரு தட்டில் தடவி, வெயி லில் உலர்த்துதல் வேண்டும். அது நன்றாக உலர்ந்தபின், அகலில் விளக்கெண்ணெய் விளக்கேற்றி, அத்தட்டில் உள்ள காய்ந்த சாந்தை அவ்விளக்குச் சுடரில் காட்டிக் கரிபடியக் காய்ச்சுதல் வேண்டும். பின்பு அக் கரிப்பொடியைச் சுரண்டி யெடுத்துப் போதுமான அளவு திரட்டி,

ஆவின் பசும்வெண்ணெயில் மை போல் விரலால் நன்ருகக் குழைக்க வேண்டும். இந்த மையைத் தூய குப்பிகளில் அடைத்து வைத்துக் கொண்டு நாள்தோறும் கண்களுக்கு இட்டுவந்தால் கண்கள் குளிர்ச்சியாக இருக்கும்; ஒளி பெருகும்; கண் நோய் வராது; பீளை கட்டாது; கண்களில் நீர் வடியாது; கண்களில் அரிப்பு இருக்காது; கண்கள் அழகாகவும் கவர்ச்சியாகவும் இருக்கும். மையைக் கண்களின் வெளிப்புறங்களிலெல்லாம் அருவருப்பாய் அப்பிக் கொள்வது நல்லதில்லை. மேல்இமை விளிம்பிலும் கீழ் இமை விளிம்பிலும் கடைக்கண்களிலும் மையிடுவதே நல்லது. புருவத்திற்கு மையிடுவதும் காதுகள் வரை மையைத் தடவிக் கொள்வதும் தேவையில்லை. புருவத்தில் மயிர்ச்செறிவில்லாத பெண்கள் தங்கள் குறைபாடுகளை நீக்க அவ்வாறுசெய்வதில் பிழையில்லை.

புதிய தட்டச்சுப் பொறி

'ஒன்று' என்று எண்ணுவதற்குள் நீங்கள் எத்தனைப் பக்கங்கள் எழுதுவீர்கள்? பக்கங்களா? ஓர் எழுத்தைக் கூட எழுதுவது கடினம் இல்லையா?

ஆனல் எழுதுவதைவிட மிக விரைவாகத் தட்டச்சுப் பொறி (TYPEWRITTER)யைக் கொண்டு ஒரு பக்கத்தையோ, ஒரு நூலையோ இக்காலத்தில் படி எடுத்து விடலாம். தட்டெழுத்துப் பொறியைக் கொண்டு 'ஒன்று' என்று எண்ணுவதற்குள் (அஃதாவது ஒரு நொடிக்குள்) ஒரு சொல்லை அச்சடிப்பதும் கடினமே. பெரும்பாலும் ஒரு பக்கத்தைத் தட்டச்சு செய்ய வேண்டுமானல் குறைந்தது 5 நிமையங்களாவது வேண்டும். (அஃதாவது 300 நொடிகளாவது வேண்டும்). அப்படியானல் 100பக்கங்கள் தட்டச்சு செய்யவேண்டுமானல் குறைந்தது 8 மணி நேரமாவது செல்லும்.

ஆனல் அமெரிக்காவில் இப்பொழுது ஒரு தட்டச்சுப் பொறியைக் கண்டு பிடித்திருக்கின்றனர்கள். மின்னணு ஆற்றலைக் கொண்டு அப்பொறி செய்யப்பெற்றுள்ளது. 100 பக்கங்களை அப்பொறி பத்து எண்ணுதவற்குள் (அஃதாவது 10 நொடிகளில்) அச்சடித்து விடுகின்றது. ஆனல் இந்த விரைவில் அடிக்கவேண்டுமானல் ஏறத்தாழ 3000 தட்டெழுத்துக்காரர்கள் வேண்டும்! அறிவியல் முன்னேற்றம் எப்படி?

தெரிந்து கொள்ளுங்கள்

* தமிழ் நாட்டின் பரப்பளவு 50,128 சதுரக்கற்கள்.

* காலையில் எழுந்தவுடன் வெறும் வயிற்றில் ஒரு குவளை தேங்காய்ப் பாலைக் குடித்தால் வயிற்றிலுள்ள கீரைப்பூச்சிகள் மலத்துடன் கழிந்துவிடும்.

* ஒரு பெரிய மரம் தன் வேர்கள் வழியாக ஒரு நாளைக்கு ஏறத்தாழ 50 குடுவை (காலன்)தண்ணீரை நிலத்திலிருந்து உறிஞ்சுகின்றது.

* உலக உருண்டையின் பரப்பில் ஐந்தில் ஒரு பங்குப் பரப்பு பாலை நிலமாகவே உள்ளது. அஃதாவது இங்குள்ள பாலைநிலப் பகுதிகள் எல்லாவற்றையும் ஒன்றுகச் சேர்த்தால் அப்பகுதி ஆப்பிரிக்காவைப்போல் இருக்குமாம்.

* பண்டைத்தமிழ் நூல்களில் ஆயிரக்கணக்கான நூல்கள் பலவகையாலும் அழிந்து போயின. அவற்றுள் 44 இலக்கண நூல்கள், 104 இலக்கிய நூல்கள், 10 இசை நூல்கள், 24 நாடக நூல்கள் முதலியவற்றின் பெயர்கள் அறிஞர்களால் கண்டு பிடிக்கப் பட்டுள்ளன.

* உடலில் வலுகுறைந்த இளைஞர்கள்,கோழி முட்டையின் வெள்ளைக் கருவை மட்டும் தனியாக எடுத்துக் காய்ச்சாத ஆவின் பாலில் கலந்து ஒவ்வொரு நாள் காலையிலும் தொடர்ந்து 40 நாட்கள் சாப்பிட்டு வந்தால் உடல் நல்லபடி வலிவேறும்.

* இவ்வுலகம் முழுவதும் ஒரே மண்ணுலகமாகக் காணப்பட்டாலும் இதில் 179,001,060 (ஏறத்தாழ 18 கோடி) வகையான மண்கள் இருக்கின்றனவென்று அறிஞர்கள் கணக்கிட்டுள்ளனர்.

* கதிரவன் மேற்பரப்பில் உள்ள தீக் கொழுந்துகள் சிலபொழுது 1,40,000 கற்கள் உயரம் எம்பி வீசுகின்றனவாம்.

* ''தமிழ்மொழி பாட்டுத் திறத்தில் கிரேக்க மொழியையும்,இலக்கியப் பெருமையில் இலத்தீன் மொழியையும் வெல்லக்கூடிய திறமை சான்றது'' என்று வின்சுலோ என்ற அறிஞர் கூறியுள்ளார்.

() சென்ற மாதம் வெளிவந்த புதிர் 1–இன் விடை:

கூடையில் இருந்த மாம்பழங்கள்: 419

() புதிர் 2–இன் விடை: ஆண்கள் 5, பெண்கள் 6, குழந்தைகள் 10.
(வேறு வகையாக விடை வந்தாலும் சரி)

இம்மாதப் புதிர்கள்:

புதிர்: 1.

பாரி, காரி, ஓரி என்ற மூன்று பையன்கள் ஒரு பனந்தோப்பிற்குச் சென்று பனம் பழங்கள் தேடினர். அன்று மாலைக்குள் ஒவ்வொருவருக்கும் பத்து பத்து பனம்பழங்கள் கிடைத்தன. ஆனால் பாரிக்குக் கிடைத்த பத்தும் ஒவ்வொரு கொட்டையுள்ள பழங்களே. காரிக்குக் கிடைத்த பத்தும் இரண்டிரண்டு கொட்டைகளுள்ள பழங்களே. ஓரிக்குக் கிடைத்த பழங்கள் பத்திலும் மூன்று மூன்று கொட்டைகள் இருந்தன.

மூவரும் நல்ல பிள்ளைகள் ஆகையால், ஒருவனுக்கும் குறையில்லாமல் மூவரும் சமமான எண்ணிக்கையுள்ள கொட்டைகள் வரும்படி பழங்களைப் பங்கிட்டுக் கொள்ள விரும்பினர். பழங்களை உடைத்தல் கூடாது. பழங்கள் எண்ணிக்கையும் சரியாக இருக்க வேண்டும். கொட்டைகள் எண்ணிக்கையும் சரியாக இருக்கவேண்டும். அவர்கள் மூவரும் தெரியாமல் விழிக்கின்றனர். உங்களுக்குத் தெரிகின்றதா பாருங்கள்.

இப்புதிரைப் போட்டிருக்கும் தம்பி மு. ஆறுமுகம். பத்தாம் வகுப்பு.
அ. உ. பள்ளி. சாத்தனூர்.

புதிர்: 2.

ஒரு பெரிய சுவர்க் கடிகாரம் விழுந்து அதன் முகத்தட்டு (DIAL) மூன்று துண்டுகளாக உடைந்து விட்டது. இதில் ஒரு பெரிய வியப்பு என்னவென்றால், ஒவ்வொரு துண்டிலும் உள்ள எண்களின் கூட்டுத் தொகை ஒன்றாகவே இருந்தது.

எண்களுள்ள முகத்தட்டு எப்படி உடைந்திருக்கவேண்டும்? ஒவ்வொரு துண்டிலும் உள்ள எண்கள் என்ன என்ன என்று கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்.

இவ்விரண்டு புதிர்களின் விடைகளையும் அடுத்த இதழில் பாருங்கள்.

O ஆழ்ந்த கருத்துள்ள கட்டுரைகளையும், பாக்களையும் தென்மொழியில் மட்டும் வெளியிடுகின்றீர்கள். அவை மாணவர்களாகிய எங்கள் உள்ளங்களுக்குப் பொருள் புரிவதில்லை. எங்கள் இளம் உள்ளங்களுக்குத் தகுந்தவாறு சிறு சிறு எளிமையான கட்டுரைகளைத் தமிழ்ச்சிட்டில் வெளியிடுவீர்கள் என்று நம்புகின்றேன்

—அ. சங்கரவேணி, தொண்டுநிலையம், பெங்களூர்-உச,

O மாணவர்களாகிய நாம் பிற்காலத்தில் பெருமையுடன் இருக்க வேண்டுமானால் இவ்விளமையிலேயே நாம் நம் அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும். அதன் பின்பு நம் தமிழ்த் தாய்க்குப் பெருமை தேடித்தர வேண்டும். நாம் வெறும் ஏட்டுப் படிப்பை மட்டும் நம்பினால் நம் அறிவு வளர்ந்து விடுமா? ஆதலால் நாம் நாள்தோறும் நூல் நிலையங்களுக்குச் சென்று நல்ல நூல்களையும் பொது அறிவிற்காக நல்ல நாளிதழ்களையும் படித்து வருதல் வேண்டும். மேலும் ஒவ்வோர் ஆண்டும் நாம் தேர்வு பெற்று அடுத்த வகுப்பிற்குப் போனவுடன், முந்திய ஆண்டின் பொத்தகங்களை விற்றுவிடலாகாது. அவற்றைச் சேர்த்து வீட்டிலேயே சிறு நூலகம் அமைத்தல் வேண்டும். அத்தகைய நூலகத்தில் நம்முடைய அறிவை வளரவொட்டாமல் தடுக்க வல்ல பொத்தகங்களைச் சேர்த்தல் ஆகாது. ஏனெனில் தேனீக்கள் வளர்க்க வேண்டுவது அறிவுடைமை. வண்டினங்களை எவராவது வளர்ப்பார்களா? மேலும் நாம் வீண்செலவு செய்கின்ற பணத்தில் நல்லறிஞர்களுடைய பொத்தகங்களை வாங்கிச் சேர்த்தல் வேண்டும். இவ்வாறு சேர்க்கப்பட்ட நூல்நிலையம் பிற்காலத்தில் நமக்கு எவ்வளவு பயன்படும்! இதை எல்லா மாணவர்களும் கடைப்பிடிக்க வேண்டுமென்பதே என் விருப்பம்.

—ப. கிருட்டினமூர்த்தி, பத்தாம் வகுப்பு. அ. உ. பள்ளி, புதுவை-7.

O தாய்மொழிக்குத் தொண்டாற்றித், தமிழ் மொழியை ஓங்கச் செய்யும் தமிழ்ச்சிட்டை எல்லா மாணவர்களும் வாங்கிப் படியுங்கள் என்று எப்பொழுதும் தூண்டி, வாங்கிப் பயனடையச் செய்தார் எங்கள் தமிழாசிரியர். அவர்க்கு எங்கள் நன்றி. எல்லாத் தமிழாசிரியர்களும் அவ்வாறு செய்ய வேண்டும் என்பது எங்கள் விருப்பம்!

—எம். ஆர். செகதீசன், முஞ்சூர்ப்பட்டு, வேலூர்.

மாணவர்க்கான மணி மொழிகள்

தமிழ்ச்சிட்டுகளே,

O உங்கள் ஒவ்வொருவரிடத்தும் ஒவ்வொரு திறமையோ ஆற்றலோ மறைந்து கிடக்கின்றது. அதனை மலரச்செய்வதே வாழ்க்கை என அறிந்து கொள்ளுங்கள்.

O ஒழுக்கம் உயிரினும் மேலானது. ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் தவருமல் கடைப்பிடியுங்கள்.

O நூல் நிலையங்கட்குச் சென்று சிறந்த அறிவு நூல்களையும் நல்ல செய்தித்தாள்களையும் படிப்பதை வழக்கமாகக் கொள்ளுங்கள்.

O பெரியோர்களின் வாழ்க்கைக் கதைகளைப் படித்து அவர்களைப் போல் நீங்களும் சிறந்தவர்களாக முயற்சி செய்யுங்கள்.

O நல்லுணர்வையும் பண்பாட்டையும் கெடுக்கக்கூடிய திரைப் படங்களில் வீணுக மயங்கி உங்களையே கெடுத்துக் கொள்ளாதீர்கள்.

O எல்லா உயிர்களிடத்தும் அன்பாயிருங்கள். உங்கள் மகிழ்ச்சிக்காக அவற்றுக்கு ஊறு விளைவிக்காதீர்கள்.

O பிறருக்கு உங்களால் இயன்ற அளவு நன்மை செய்தல் வேண்டும் என்பதைக் கட்டாயமாகக் கொள்ளுங்கள்.

O உங்கள் பெற்ருேரிடத்தும் பெரியோரிடத்தும் பணிவுடனும் இன்சொல்லுடனும் நடந்து கொள்ளுங்கள்.

O சோலைகளிலும் காடுகளிலும் திரிந்து இயற்கை அழகைச் சுவைப்பதிலும், இயற்கைப் பொருள்களோடு உறவாடுவதிலும் இன்பம் காணுங்கள்.

O இறுதியாக, உங்கள் தாய் மொழியாகிய தமிழும், தாயகமாகிய தமிழகமும் இருவிழிகள் எனக்கொண்டு அவற்றுக்கு இயன்ற அளவு பணிபுரியுங்கள்.

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.